விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 11 ரபி - ஆகி 3 இதழ் 312
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-12-84

## ஆசிரியர் நேர்முக பரீட்சையில் இவர்களுக்கு முன்னுரிமை

[கொழும்பு]
ஆசிரியர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகிறவர்கள் 6 மாத காலம் வசதிக் கட்டண உதவியில் ஆசிரியர் பதவிகளிலிருந்தவர்களாயிருப்பின் 10 புள்ளிகள் அதிகமாகப் பெறுவார்கள் என்று கல்விச் சேவைக் குழுவின் உறுப்பினர் திரு. எஸ். ஜெயக்குமார் கூறினார்.

ஆறு மாத காலத்திற்கு மேல் இவ்வாறு பணிபுரிந்திருந்தபோதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காதவர்கள் தமது கல்லூரி அதிபரிடமிருந்து ஒரு உறுதிக் கடிதத்தை பகுதிக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் பெற்றுவந்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து ஆரம்ப ஆசிரியர் பதவிகளுக்கு 418 பேரும், விஞ்ஞானம், கணித ஆசிரியர் பதவிகளுக்கு 90 பேரும், ஆங்கில ஆசிரியர்களாக 43 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

[6-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொலை!

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]
ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. ஞானப்பிரகாசம் [47 வயது] நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில்வைத்தே இளைஞர் கோஷ்டி ஒன்றினால் சுடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர், பொலிஸ் சேவையில் கான்ஸ்டபிளாக சேர்ந்து, படிப்படியாக இன்ஸ்பெக்டர் தரத்திற்கு உயர்ந்தார். ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தார். நத்தார் விடுமுறை தினமானநேற்று அவர் குடும்பத்தாருடன் வீட்டில் இருக்கும்போதே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். நேற்று மாலை 5 மணிக்கு அவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவக் காலைக்கு கொண்டுவரப் பட்டது.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா மரண விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனையை நடத்தினார். பொலிஸ் அதிகாரிகள், சவக்காலைக்கு நேற்று மாலை வந்து சடலத்தை பார்வையிட்டனர்.

பொலிஸார், சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று விசாரணையை மேற்கொண்டனர்.

இறந்தவரின் தலையிலும், கண்ணிலும், நெஞ்சிலும், வயிற்றிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம், குடும்பத்தவரிம் ஒப்படைக்கப்பட்டது. (க)

### 'புலிகள்' உரிமை கோருகிறார்கள்

[யாழ்ப்பாணம்]
நேற்று இன்ஸ்பெக்டர் கே. ஞானப்பிரகாசம் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு தாங்களே பொறுப்பு என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம உரிமை கோரியுள்ளது.

நேற்றுமாலை யாழ் நகரில் காணப்பட்ட சுவரொட்டி பிரசுரங்களில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. நாரந்தனையில் இயக்கத்தைச் சேர்ந்த ஸ்டீபன் என்பவர் கொலை செய்யப் பட்டமைக்கு திரு ஞானப்பிரகாசம் காரணமாய் இருந்தார் என்றும், விடுதலை இயக்கங்களுக்கு விரோதமாகச் செயல்பட்டதாகவும், சிறிலங்கா அரசிற்கு அடிவருடியாக இருந்ததாகவும் இவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளதுடன் இதற்காகவே அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகவும் 'புலிகள்' தெரிவித்துள்ளனர்.

### ஆஸி. செல்லும் இலங்கை கிரிக்கெட் குழு

[கொழும்பு]
இலங்கைக் கிரிக்கெட் குழு மூன்று மாத கால விஜயமொன்றை மேற்கொண்டு இன்று அவுஸ்திரேலியா செல்கிறது. திரு. டுலிப் மெண்டிஸ் தலைமையிலான இக்குழுவில் பதினாறு வீரர்கள் இடம்பெறுகின்றனர்

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பல போட்டிகளில் இவ்வணி கலந்துகொள்ளவுள்ளது.

### டாக்டர் தம்பதி படுகொலை

[கொழும்பு]
ஒரு தமிழ் டாக்டரும் அவரது மனைவியும் தொடங்ஸ்லந்தை என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

[6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## நேர்முகப் பரீட்சைக்கு செல்வோர் ரயில் ரிக்கட் பெறுவதற்கு பெரும் நெரிசல்

(யாழ்ப்பாணம்)
நாளை வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்குச் செல்வதற்காக நேற்று யாழ். ரயில்நிலையத்தில் ரிக்கற்பெறுவதற்காக பெரும் தொகையான பிரயாணிகள் காணப்பட்டனர்:

'இன்ரசிற்றி ரயிலில்' பயணம்செய்பவர்களுக்கு ஆசனம் பதிவு செய்யாமல் ரிக்கற்வழங்கக் கூடாதென்ற நடைமுறை வழக்கத்திலுள்ளதால், பதிவு செய்யாதபலர் நேற்று ரிக்கற் பெறமுடியாமல் திரும்பிச் சென்றனர்.

இன்ரசிற்றி ரயிலில்பதிவு செய்யாமலே பயணிகள் பிரயாணம் செய்வதற்கு ரயில்வே திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டால் உதவியாக இருக்கும் என்று பிரயாணியொருவர் தெரிவித்தார்.

வடபகுதியிலிருந்து கொழும்பு செல்லும் தனியார் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதாலேயே பெரும்தொகையான பிரயாணிகள் ரயிலில் பயணம்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## ஊர்ஜிதமற்ற செய்தி: கடத்தப்பட்ட இருவரும் உயிருடன் இருக்கிறார்கள்?

(கொழும்பு)
கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் கடத்தப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவரும் உயிருடன் இருப்பதாக இங்கு ஊர்ஜிதமற்ற செய்திகள் கிடைத்துள்ளன.

அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் இதுபற்றிய செய்தியை ஒத்துக்கொள்ளவோ மறுக்கவோ இல்லை. ஆனால் ஏதோ மாற்றம் இருக்கிறது என்பதை மட்டும் வெளியிட்டார்கள்.

கடத்தப்பட்ட இருவரையும் கிறிஸ்மஸ் சமயத்தில் விடுவிக்கும்படி மதத்தலைவர்களும், சமூகஸ்தாபனங்களும் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

## தமிழ்நாட்டில் நேற்று பரவிய ஒரு வதந்தி

(சென்னை)
இலங்கை ஜனாதிபதிபற்றிய வதந்திஒன்று தமிழ்நாட்டில் காட்டுத்தீபோல் பரவியது பின்னர் அதில் உண்மை எதுவும் இல்லையென வானொலி, மற்றும் தொடர்பு சாதனங்கள்மூலம் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியைப்பற்றி அமங்கலமானவிதத்தில் பரவியிருந்த அவ்வதந்திபற்றி கேள்வியுற்றதும் தமிழ்நாட்டிலுள்ள இலங்கை துணைத்தூதரக அதிகாரிகள் உடனடியாக இலங்கையுடன் தொடர்புகொண்டு நிலைமையைத் தெளிவுபடுத்தினர்.

## கொள்ளைகளின் விளைவு— ஆயிரம் தொழிலாளர் வேலைஇழக்கும் நிலை!

### நீர்விநியோக திட்டமும் தடைபடும்!!

(கொழும்புத்துறை)
யாழ். குடாநாட்டில் நீர்விநியோகத்திட்ட ஒப்பந்த வேலைகளை மேற்கொண்டு வரும் சமக்கோன் நிறுவனம் தொடர்ந்து கொள்ளைகளுக்கு உள்ளாகி வருவதை அடுத்து நிறுவனம் மூடப்படும் நிலைக்கு வந்துள்ளதாம.

இதனால் இந்நீர்விநியோகத் திட்டவேலைகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ள சுமார் ஆயிரம் ஏழைத்தொழிலாளிகள் தாம்வேலை இழக்கும் அபாயநிலை தோன்றியுள்ளதாகவும், கொள்ளையடித்த பொருட்களைத் திரும்பவும் ஒப்படைத்துத் தமக்கு விமோசனம் அளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வருடம் ஜூன், ஜூலை, ஓகஸ்ட், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மொத்தம் சுமார் 12, 85, 400 ரூபா பெறுமதியான வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியன சமக்கோன் நிறுவனத்திடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம்.

தொழிலாளர் விடுத்துள்ள வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:-

(6-ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

## குருநகர் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதம்

[யாழ்ப்பாணம்]
குருநகர் பகுதியில் நேற்று மாலை சிறு அசம்பாவிதச் சம்பவம் ஒன்று ஏற்பட்டதாகவும் சிலர் காயமுற்றதாகவும் அறியப்படுகிறது.

இச் சம்பவத்தையடுத்து ஆயுதப்படையினர் குறித்த பகுதிக்குவந்து இளைஞர்கள் பலரைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

## வாகனப்போக்குவரத்து அனுமதிக்கு ஏ. ஜி. ஏ. காரியாலயங்களில் விண்ணப்பப் படிவங்கள்

(வண்ணார்பண்ணை)
அரசின் புதியபாதுகாப்புச் சட்டவிகளின் கீழ் மோட்டார்வாகனங்களை வைத்திருத்தல், குறித்த வீதிகளில் பாவித்தல் தொடர்பான விண்ணப்பங்கள், யாழ் மாவட்டத்தின் சகல உதவிஅரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் வழங்கப் படடுவருகின்றன.

வாகன உரிமையாளர்கள் தமது லைசென்ஸ், இன்சூரன்ஸ் வரிப்பற்றுச்சீட்டு ஆகியவற்றைக் காட்டி இப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவசதி செய்யப்பட்டுள்ளன

உதவி அரசாங்கஅதிபர்களால் பெறப்படும் இப்படிவங்கள் பொலிஸ் அதிபருக்கு அனுப்பப்பட்டு பரிசீலித்தபின் உதவி அரசாங்க அதிபர் ஊடாகவே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய பொதுத்தேர்தல்: 117 தொகுதிகளில் நாளை வாக்களிப்பு

[புதுடில்லி]
இந்தியாவின் 8-வது பொதுத் தேர்தலின் 2-வது கட்ட வாக்களிப்பு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. 117 தொகுதிகளில் பிரசாரங்கள் யாவும் நேற்று மாலையுடன் முடிவடைந்தன.

6 மாநிலங்களிலும், 2 யூனியன் பிரதேசங்களிலும் உள்ள 117 தொகுதிகளில் நாளை வாக்

[6-ம் பக்கம் 5ம்கலம் பாரக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

5 மாத அல்சேசன் [கடுவன்] விற்பனைக்குண்டு. முகவரி 117, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை. 1049

பாவனையில் உள்ள SONY கலர் T. V. 20 அங்குலம், N. V. 600 வீடியோ டெக், புத்தம் புதிய 6 Cu. FT FREEZER-HOOVER FLOOR POLISHER-NECCHI தையல் மெசின், ரலி 'ஸ்போட்ஸ்' சைக்கிள் எவ்வயதினரும் பாவிக்கக் கூடிய மடித்தல் சைக்கிள் ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு. 23, சென்ற் பீட்டர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1046

புதிய வீடு 4படுக்கை அறைகள் தற்காலிக வசதிகளுடன் குளி அறைகள் குசினி மாபிள் நிலம் மின் விசிறி, கராஜ் விற்பனவுக்குண்டு. 187, 3ம்குறுக்கு வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 22029. 1020

யாழ்ப்பாணம் — கண்டி பிரதான பாதையில், கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில், ஏ. கே. ஆர். மாடிக் கட்டடம் அருகில் பதினேழு அடி அகலமும் நூற்று நாற்பது அடி (உட்புறமாக) நீளமும் கொண்ட காணி, ஒரு மாடிக் கடையுடன் விற்பனைக்குண்டு. இதற்கருகில் பிரதான பாதையிலேயே பத்து அடி அகலமும் முப்பத்து ஐந்து அடி நீளமும் கொண்ட காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு விளம்பர இல: 1087, C/o 'ஈழநாடு'. (1087)

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் சகல வசதிகளுடன் வீடு ஒன்று இரண்டரை நிலப்பரப்பு விற்பனைக்குண்டு, தொடர்பு: 1A, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (1092)

நல்லூர் வைமன் வீதியில் நவீன வசதியும் நன்நீர் சுற்று மதிலுடனும் கூடிய 4 அறை புதிய வீடு 2 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. விபரம்: 55 A, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (1089)

## தேவை

எமது பேக்கரிக்கு கேக் பணிஸ் மற்றும் சுவீற்ஸ்வகைகள் தயாரிப்பதில் அனுபவமும் திறமையும் உள்ள பாஸ் ஒருவர் உடன் தேவை நேரில் வரவும் ஹோட்டல் ரூலெக்ஸ் 340 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம், 1085


## வாடகைக்கு

இளவாலை பத்தாவத்தை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டில் இரண்டு அறை, ஹால், குசினி ஆகியவை வாடகைக்கு விடப்படும். குடும்பஸ்தர்கள் மாத்திரம் தொடர்பு கொள்க. டாக்டர் வி. சிவஞானவேல், ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம். 1047

சகல நவீன வசதிகளுடன், ஒரு வீட்டின் சிறிய பகுதி, யாழ்—கண்டி வீதியில் உடனடியாக வாடகைக்கு உண்டு. திருமதி மகாதேவா. 254, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (1093)

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் தருமலிங்கம் சிவப்பிரகாசம்



தோற்றம்: 28–1–1915

மறைவு: 7–1–1984

திதி: 26-12-1984

அன்பும் அமைதியும் ஒருங்கே அமைந்து பண்புடனும் பாசத்துடனும் எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவியும், பிள்ளைகளும்.

சிவநிதி, மானிப்பாய்.
26-12-84 (1082)

## கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத் தொண்டர் சபையினால் கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்ற ஒரு கைநூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்களை அளவெட்டியைச் சேர்ந்த அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் தொகுத்துள்ளார்.

சிறுவர் முதல் முதியோர் வரை ஓதிப்பலன் பெறும்வகையில் இந்நூல் தொகுப்பித்து வெளியிடப்பட்டுள்ளது.

"இச் சபையினரின் தொண்டைவாழ்த்துவதோடு, இந்நூலைப் படிப்போர் புன்னெறி போக்கி நன்னெறியைக் கடைப்பிடித்து திருவருட்சீலர்களாக வாழ்வார்கள் என்ற உறுதிகூறி ஆசீர்வதிக்கிறேன்" என்று இந்நூலுக்கு வழங்கிய முன்னுரையில் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் தெரிவித்துள்ளார்.

இந்நூலில் விநாயகர், சிவன் அப்பிகை, சரஸ்வதி, ஸ்ரீநாராயணர், திருமகள், புவிமகள், ஸ்ரீநாகராஜன், ஸ்ரீஆஞ்சநேயர் கருடன். ஸ்ரீவேல்முருகன், ஸ்ரீ வைரவமூர்த்தி, வீரபத்திரக் கடவுள், அரிகரபுத்திரர், சண்டேசுர நாயனார் ஆகிய கடவுள்கள் குறித்துக் கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்பாடப்பட்டுள்ளது.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறுவதுடன் தமது இல்லங்களிலும் வைத்திருக்கவேண்டியது அவசியமாகும்.

-வெற்றி

## மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச் சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் (6000 சாக்குகள்) விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிககப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்திப் பூரணப்படுத்தி 27-12-84 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பொதுமுகாமையாளர்
மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம்.
(1090)

## தெல்லிப்பழையில் தட்டுப்பாடின்றி பொருட்கள் கிடைக்கும்!

[மாவிட்டபுரம்]

வலி. வடக்குப் பகுதியில் பாவனையாளர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் துரித ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளை நிலையங்கள் மூலம் மக்களின் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

அன்றாட பாவனைப் பொருட்களை பாவனையாளர்களுக்குத் தட்டுப்பாடின்றி வழங்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் கடைக்காரர்களுக்குப் பொருட்கள் விநியோகிப்பது நிறுத்தப்பட்டுள்ளபோதும் குறிப்பிட்ட அளவு பொருட்கள் விநியோகிக்கப் பட்டுவருகின்றன.

லொறிகள் மூலம் உடனுக்குடன் பொருட்கள் தருவிக்கப் பட்டு விநியோகம் சீராக நடைபெற்றுவருகிறது.

சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா இந்த உணவு விநியோகத்தை கண்காணித்து வருகிறார்.

## நன்றி நவிலல்

### திருமதி வரோணிக்கா மேரிஜோசவ்

மண்ணுலகு: 01-01-1928

விண்ணுலகு: 14-12-1984

15-12-1984ல் நடைபெற்ற அன்னாரின் ஈமச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் எமது நன்றியறிதலைத் தெரியத் தருகிறோம். முக்கியமாக இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய சகோதரிகட்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மேரி ஜோசவ் குடும்பத்தினர்

சென்ஜேம்ஸ் லேன்,
இளவாலை.

(1088)

## அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் மு. சண்முகன்

(சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்)

மலர்வு: 17-01-1939 உதிர்வு: 16–11–1984

எமது உள்ளத்தின் உன்னத ஒளி அகன்றுவிட்டது நாங்கள் செவிமடுத்து மகிழ்ந்த இனிய குரல் ஓய்ந்து விட்டது. எங்கள் உறைவிடத்தில் ஓரிடம் என்றுமே நிரப்பமுடியாத வெற்றிடமாயிற்று என்றும் எங்கள் உள்ளத்தில் வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றோம். தங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று புதன்கிழமை (26-12-84) அன்று பொன்னாலை, சுழிபுரத்திலுள்ள "சண்முக வாசா" எனும் அன்னரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவில் துயருறும்

தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
1094


## விமான டிக்கட்டுக்களை மலிவாகப் பெறுவதற்கும்

★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான

பிரயாண ஒழுங்குகளை செய்வதற்கும்

யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

ரான்ஸ் யூரோ ரவல்ஸ்

தொடர்பு: திரு. மகேந்திரராஜா,

ரான்ஸ் யூரோ ரவல்ஸ் இல. 6, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23831

## Euro Lanka Travels Ltd

கொழும்பு-பேர்லின் (BERLIN) மற்றும் உலகின் எல்லாப் பாகங்களிற்கும் மற்றெல்லா ஸ்தாபனங்களை விட மிகவும் குறைந்த விலையில் விமான டிக்கட்டுகள்

எமது சேவைகளின் விபரங்கள்

★ பிரயாணக் காசோலைகள் (TRAVELLER'S CHEQUE) எடுத்துக்கொடுப்பதற்கான இலவச சேவைகள்

★ கொழும்பிலிருந்து விமான நிலையத்திற்கு இலவச போக்குவரத்துச் சேவை

★ விமான நிலையம் வரைக்கும் எங்கள் பிரதிநிதிகளின் 24 மணி நேர சேவை

மேலும் விபரங்களுக்கு கொழும்பிலிருந்து யாழ். நகர் வந்திருக்கும் எமது பிரதிநிதியை பின்வரும் முகவரியில் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

P. SHANMUGARAJAH
40, 3rd CROSS STREET, JAFFNA

தலைமைஅலுவலகம்: EURO LANKA TRAVELS LTD
6A, Daisy Villa Avenue, Colombo-4
தொலைபேசி: 585990, 589992

கிளை: EURO LANKA TRAVELS LTD
8th Floor, Paul Vi Centre, Front Street,
Calombo-11
(1071) தொலைபேசி: 549495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா பொதுத்தேர்தல்:

# வாக்குப்பதிவு அமைதியாக நடை பெற்றது

(புதுடில்லி)

**இந்தியாவின் 8-வது பொதுத் தேர்தலில் 389 லோக்சபா தொகுதிகளில் நேற்று முன் தினம் அமைதியான முறையில்வாக்குப்பதிவு நடைபெற்றது. சராசரியாக 60 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர்.**

இந்திய மாநிலங்களில் மேற்கு வங்காளம், கேரளம், தமிழ்நாடு ஆகியவற்றில் தான் அதிகளவில் வாக்குப் பதிவு நடைபெற்றது. மேற்கு வங்காளத்தில் 70 சத வீதத்துக்கும் அதிகமானோர் வாக்களித்துள்ளனர்.

டில்லியில் வாக்குப்பதிவு மிகவும் மந்தமாகவே நடந்தது. உத்தரப்பிரதேசத்தில் கடும் குளிர் வீசியபோதும் வாக்குப் பதிவு சுறுசுறுப்பாக நடந்தது. மத்தியப் பிரதேசத்தில் மந்தமான வாக்குப்பதிவு நடைபெற்றது. கர்னாடகத்தில் மேற்குப் பகுதி மலைத்தொடர் அமைந்துள்ள தொகுதிகளில் வாக்குப்பதிவு மந்தமாக இருந்தது.

பாண்டிச்சேரியில் மூன்று கிராமங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சில கிராமங்களிலும் தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் அவர்கள் வாக்களிப்பைப் புறக்கணித்துள்ளனர்.

கடந்த தேர்தல்களிலும் பார்க்க இந்தத் தேர்தலில் அசம்பாவிதங்கள் குறைவாகவே இடம்பெற்றன. தமிழ் நாட்டில் சிறீவில்லிபுத்தூரில் மாத்திரம் ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் அதனைக் கட்டுப்படுத்திவிட்டதாகவும்கூறப்படுகிறது. மொத்தத்தில் தேர்தல் அமைதியாக நடந்தது.

### தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டில் 38 லோக்சபா தொகுதிகளுக்கும் 232 சட்ட சபைத் தொகுதிகளுக்கும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்குப் பதிவில் சராசரியாக 65 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

தமிழ்நாட்டில் சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் தான் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன. இம்மாவட்டங்களில் 70 சத வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன. மதுரை மாவட்டத்தில் 65 சதவீதமானவாக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் முதலமைச்சர் எம் ஜி. ராமச்சந்திரன் போட்டியிடும் ஆண்டிப்பட்டித் தொகுதியில் 70 சதவீதமான வாக்குகள் பதிவாகின. இத்தொகுதியில் ஆண்களைவிட பெண்களே அதிகமான அளவில் வாக்களித்தனர். தமிழ்நாட்டில் விவசாய அமைச்சர் திரு. காளிமுத்து போட்டியிடும் மதுரை கிழக்குத் தொகுதியில் அதிகமாக 75 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

சென்னை மாவட்டத்தில் 65 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன. ஏனைய மாவட்டங்களில் சராசரியாக 60 சத வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன [சூ]

---

## வவனியாவில்

# ஹெலிகொப்டர் மூலம் துண்டுப் பிரசுரங்கள்

(வவனியா)

வவனியாவிலும் சுற்றுப் புறங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் ஹெலிகொப்டர் மூலம் போடப்பட்டன.

தேசியபந்தோபஸ்து அமைச்சினல் இப்பிரசுரங்கள் போடப்பட்டன.

கள்ளமாக வைத்திருக்கும் நவீன ரக துப்பாக்கிளை பாதுகாப்பு படையினர் கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

சன்மானமும் வழங்கப்படவுள்ளதாகவும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# மாவில் மோசடி: எச்சரிக்கை

(சுண்டிக்குளி)

பேக்கரிச் சொந்தக்காரர்களுக்குப் பிரத்தியேகமாகக் கொடுக்கப்படும் மாவைப் பாண் தயாரிக்காமல் தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கூடுதல் விலைக்கு விற்பதும், நிறை குறைந்த பாணைத் தயாரித்து விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு உடனடியாக மா விநியோகம் நிறுத்தப்படும் என்றும், இதுதொடர்பாக இனிமேல் அடிக்கடி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும், யாழ். உள்நாட்டு விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

---

## திடீர் வேட்டையில் சிக்கினர்

# பாண் விற்பனையில் கொள்ளை லாபம்!

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணத்தில் நிறை குறைந்த பாண் விற்ற இரு பேக்கரிச் சொந்தக் காரர்கள் விலைக் கட்டுப்பாட்டதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர். இதில் ஒருவர் 160கிராம் எடையுள்ள பாணை அதன் கட்டுப்பாட்டு விலையான 1ரூ07 சதத்திற்கு விற்பதற்கு பதிலாக 1ரூ 50 சதத்திற்கு விற்பனை செய்ததையும், இன்னொருவர் 395 கிராம் எடையுள்ள பாணை 2-68 சதத்திற்கு விற்பதற்குப் பதிலாக 3ரூ 05 சதத்திற்கு விற்பனை செய்ததையும் கண்டு பிடித்துள்ளனர். ஒரு சாதாரண பாணின் சரியான நிறை 450 கிராம். அதன் கட்டுப்பாட்டு விலை 3ரூ 05 சதமாகும். எனவே இது விடயமாக சம்பந்தப்பட்ட பேக்கரி சொந்தக்காரர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இத் திடீர் வேட்டையை உள்நாட்டு விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள பொறுப்பதிகாரி திரு. யேசுதாசன் தலைமையில் திருவாளர்கள் எஸ். இரத்தினம், எம். கே. நவரத்தினம், சிவானந்தன், எம் சிவேஸ்வர தம்பி கனகசபை ஆகியோர் மேற்கொண்டனர்.

---

# பற்றைக்குள் கிடந்த அந்தக் கடிதங்கள்



யாழ்ப்பாணம் பிரதம தபால் கந்தோருக்குப் பின்புறத்தில் பற்றைக்குள் பொறுப்பற்ற விதத்தில் வீசப்பட்டிருந்த வெளிநாட்டுக்கடிதங்கள், நத்தார்வாழ்த்துமடல்களையே இப்படம் காட்டுகின்றது. பல பெறுமதி மிக்க கடிதங்கள், சோலைகள், கண்கவர் வாழ்த்துமடல்கள் என்பன இவற்றில் அடங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

[இது தொடர்பான செய்தி இம்மாதம் 23ம் திகதி 'ஈழநாடு' இதழில் வெளிவந்தது தெரிந்ததே]

---

## சிமெந்து தட்டுப்பாட்டை

# நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக நிலவிவந்த சிமெந்துத் தட்டிப்பாட்டை நீக்க, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகியன நடவடிக்கை மேற் கொண்டுள்ளன.

இப்பொழுது குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் சிமெந்து உற்பத்தி வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. இதனால் பாவனையாளர்களும், கட்டிட வேலை செய்யும் தொழிலாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நன்மை கருதி தொழிற்சாலை அதிகாரிகள் முன்னர் உற்பத்தி செய்யப்பட்டுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த சிமெந்து வகைகளை விற்பனை செய்ய முன்வந்துள்ளனர்.

சிமெந்து விற்பனைத்தொழிற்சாலை விற்பனைப்பகுதிகளில் வைத்து நேரடியாகவேபாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

---

# உஸ்ரினேவ் மரணச்சடங்கில்

## செர்னென்கோ கலந்துகொள்ளவில்லை

[மாஸ்கோ]

சோவியத் பாதுகாப்பமைச்சர் மார்ஷல் டிமிஸ்ரி உஸ்ரினேவின் மரணச் சடங்கில் சோவியத்ஜனுதிபதி கொன்ஸ்ரன்ரின் செர்னென்கோகலந்துகொள்ளவில்லை. மாஸ்கோவில் காணப்பட்ட கடும் குளிர் காரணமாகவே இவர் கலந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகிறது,

மார்ஷல் உஸ்ரினேவின் இறுதிச் சடங்கு சகல இராணுவ மரியாதைகளுடன் கிரெம்ளின் செஞ்சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. வயது முதிர்ந்த சோவியத் ஜனுதிபதி குளிர் காரணமாகவே மரணச் சடங்கில் கலந்துகொள்ளவில்லை.

சோவியத் கிரெம்ளினின் "இராணுவமூளை" என உலகத்தினரால்வர்ணிக்கப்பட்ட மார்ஷல் உஸ்ரினேவின் மறைவு சோவியத் யூனியனில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது

சோவியத் யூனியனின் புதிய பாதுகாப்பமைச்சராக சிரேஷ்ட இராணுவத் தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். [சூ]

---

# திருமலை நகரசபை வரவு·செலவுதிட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை நகர சபை 1985ஆம் ஆண்டில் 72லட்சத்து 79 ஆயிரத்து 600 ரூபாவை வருமானமாக எதிர்பார்க்கின்றது

1985ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நகரசபையின் செயலாளர் திரு. ம வேலுப்பிள்ளையும், கணக்காளர் திரு க. தியாகராசாவும் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ளஉத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கையின் முன்னுரையில்; 1983 ஜூலையில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து நகரசபையின் வருமானம வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இப்பாதிப்பு, தமாஷாவரி, சந்தை வருமானம் முதலியவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஆண்டிப்பட்டியில் வாக்களிப்பு மும்முரம்!

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரனின் ஆண்டிப்பட்டி சட்டசபைத் தொகுதியில் வாக்கெடுப்பு நேற்று சுறுசுறுப்பாக இடம் பெற்றது

இத்தொகுதியில் வாக்காளர்கள் சூரியோதயத்துக்கு முன்னரே வாக்களிப்பு நிலையங்களில் கூடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

இதே வேளை இந்திய சட்டசபைத் தேர்தல் பற்றிய விசேட அறிவித்தல்கள் எதிர்வரும் 28-ந் திகதி மாலை 4-30 மணி முதல் 29-ந் திகதி காலை 10 மணி வரை இந்திய வானொலியில் இடம்பெறும். இவை ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை வெளியாகும். (கி)

---

## வெளிநாடு வேலைவாய்ப்பு மோசடி

# பாகிஸ்தானில் அலையும் இலங்கை தமிழ் இளைஞர்!

(சுண்டுக்குளி)

மத்திய கிழக்கு நாடொன்றுக்கு வேலை பெற்றுத்தருவதாகக் கூறி, தலா 30 ஆயிரம் ரூபாவை யாழ் மாவட்டத்திலுள்ள பத்தொன்பது பேரிடம் பெற்று ஏமாற்று மோசடி செய்த விஷயம் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

நவாலியைச் சேர்ந்த ஒருவர் இவர்களிடம் பணம் பெற்று பாகிஸ்தானுக்குக் கூட்டிச்சென்று அங்கிருந்து மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதே முன்னைய ஏற்பாடு.

பாகிஸ்தானுக்குச் சென்றதும் சில நாட்கள் 'இன்று நாளை' என்று ஏமாற்றினர். திடீரென்று ஒரு நாள் இவர்களைக் கூட்டிச்சென்றவர் வேறொரு நாட்டுக்குப் பறந்து சென்றுவிட்டாராம். அவர் பறந்துசென்றது பின்னர்தான் அந்த இளைஞர்களுக்குத் தெரியவந்தது.

காணி நகைகளை ஈடுவைத்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் இவர்கள் வெளிநாடு சென்று தமது வீட்டுக் கஷ்டங்களைத் தீர்க்க முனைந்தார்களாம்.

பாகிஸ்தானிலிருந்து கடிதம் அனுப்பக்கூடக் காசு இல்லாத நிலையில் பிச்சை எடுத்த காசில் எல்லா இளைஞர்களும் ஒன்ருகச் சேர்ந்து கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

நாடு திரும்புவது எப்படி என்பது இவர்களை எதிர் நோக்கும் பெரும் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணத்தில் கடந்த 19ம்திகதி

# இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் இருப்போர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 19-ம் திகதி புதன் கிழமை யாழ். நகரில் இராணு வத்தினரால் கைது செய்யப் பட்டு 84 பேர் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட் டுள்ளனர். இவர்களில் 15 பேரின் பெயர் விபரம் நேற்று வெளியிடப்பட்டது. எஞ்சி யோர் விபரம் வருமாறு:-

தம்பிரட்ணம் வில்வரட் ணம்-ஏரூவூர், மட்டக்களப்பு. பொன்னம்ரத்னகுமார்- கோண்டாவில், முத்தையா மகேந்திரன் - யாழ்ப்பாணம், பெருமாள் சுப்பிரமணியம்- யாழ்ப்பாணம், சலமி சப்ரீன்- யாழ்ப்பாணம், பழனி நேசன்- கொக்குவில், செல்லப்பா சிறீ மோகன்-சுதுமலை, திருநாவுக் கரசு தளபதி - ஆனைக் கோட்டை, துரைராசா அரு ளேந்திரன்-சரவணை. நல்லையா ரகு ாதன்-வேலணை, கவிந்தன் செல்வம்-பருத்தித்துறை.

பாலச்சந்திரன் சர்வேஸ் வரன்-சித்தன்கேணி, துரைரத் தினம் ரவிச்சந்திரன்-கொக்கு வில், ஜெயக்குமார் - வண்ணார் பண்ணை, புவனலிங்கம் அசோ கன்-யாழ்ப்பாணம், சின்னத்தி சந்திரன்-காரைநகர், தம்பிப் பிள்ளை ராஜகுலநாதன்-சண்டி லிப்பாய். ரட்ணசிங்கம் ரகு நாதன்-கோப்பாய், சந்தனப் பாலசோபாலன் -யாழ்ப்பா ணம், வெல்லிபுரம் சந்திரகுமார்- கொககுவல், ஐயாக்கண்ணு ஆனந்தன்-லிந்துல்ல.

செபமாலை பத்திநாதர்- சுன்னாகம், அருணாசலம் செல் லையா சத்தியகுமார்-கொக்கு வில், பிரான்சிஸ் அலெக்ஸ் கமிலஸ் யோகன்-குருநகர், அருளப்பு தேவகுமார்-ஆனைக் கோட்டை, அதிமோகன் பெரியசாமி - யாழ்ப்பாணம், கருப்பையா முன்னேஸ்கரன்- யாழ்ப்பாணம், நடேசு ராச ரத்தினம் - கந்தர்மடம், சிவசுப்பிரமணியம் உதய குமார்- நுணாவில், ஆறுமுகம் வசந்தமோகன்- யாழ்ப் பாணம், ராசரத்தினம் சபா நாதன்- யாழ்ப்பாணம், அரு ளம்பலம் தர்மலிங்கம்- காரை நகர், பாலரட்ணம் சந்திர மோஹன்- யாழ்ப்பாணம், சிவராஜா சிவலிங்கம்- யாழ்ப் பாணம், சுப்பிரமணியம் சண்முகலிங்கம்- நல்லூர், கந் தையா சந்திரகுமார்- யாழ்ப் பாணம், சுப்பிரமணியம் குக ணேசநாதன்- ஊர்காவற் றுறை, கதிரவேலு குணரட் ணம்- வட்டுக்கோட்டை, மாரி இந்திரன்- யாழ்ப்பாணம், சந் திரசேகரன் ராதாகிருஷ்ணன்- பருத்தித்துறை, சித்தன்காமர்- யாழ்ப்பாணம்

நடராசா சிவதேவன்- மீசாலை, தேவநாயகம் மயில் வாகனம்- யாழ்ப்பாணம், பார்த்தசாரதி- யாழ்ப்பாணம், கந்தையா ஜெகதீஸ்வரன்- மானிப்பாய், சரவணமுத்து அந்தோனி ஞானப்பிரகாசம்- யாழ்ப்பாணம். பாலலிங்கம் நாதன் மூர்த்தி- புத்தூர், நாக லிங்கம் குலசேகரம்- யாழ்ப் பாணம், வைத்தி முருகன்- யாழ்ப்பாணம், தர்மலிங்கம் முருகையா- யாழ்ப்பாணம், சடயன் கணேஷ்- யாழ்ப்பா ணம், சண்முகம் நாக லிங்கம் யாழ்ப்பாணம், பூ.சந்திரன்- யாழ்ப்பாணம், கறுப்பன் பாலசிங்கம்- யாழ்ப் பாணம், பெருமாள் கணே சன்- யாழ்ப்பாணம், சந்திரம் ராஜகோபால்-யாழ்ப்பாணம், வீரையாபிள்ளை ஜெயமணி- யாழ்ப்பாணம், ராசையா வித்தியானந்தன்- கட்டுவன், வேலு வேலநாதன்-யாழ்ப்பா ணம்.

கனகராஜா சிவநாதன்- யாழ்ப்பாணம், முத்துலிங்கம் தயாபரன்- கல்லடி மட்டக் களப்பு, ராமையா முத்தழகு- யாழ்ப்பாணம், ஆறுமுகம் தன வேந்திரன் வெங்கடாசலம்- கல்லோயா, வீரையா இரா ஜேந்திரன்- யாழ்ப்பாணம்,

செல்லத்துரை பன்குணரட் ணம்- சுளிபுரம், கந்தையா விஜயகமூர்த்தி விஜயகுமார்- ஊர்காவற்றுறை, சிவசம்பு முத்துராஜா-சுளிபுரம், கண பதிப்பிள்ளை சிவயோகநாதன்- யாழ்ப்பாணம், முருகன் சபேசன்- சுளிபுரம்.




'எஸ்லோன்' வீடு கட்டுவோ ருக்கான போட்டி சீட்டிழுப்பு காரட்ஸ் விளம்பர நிறுவனத் தில் அண்மையில் நடைபெற் றது. படத்தில் இடமிருந்து வலமாகக் காணப்படுவோர்: காரட்ஸ் நிர்வாக அதிபர் ஜி ஜே. ஜெயவர்த்தன, மகா ராஜா நிறுவன கைத்தொழில் விற்பனைப் பிரிவு இயக்குநர் ரி. எஸ். கணேந்திரன், உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு நிர்வாக அதிகாரி டபிள்யூ. டி. ஏ. பி.எச். விக்கிரமசிங்க, மகாராஜா நிறுவன கைத் தொழில் விற்பனைப் பிரிவு சந்தைப்படுத்தும் அதிகாரி ரி. விஸ்வலிங்கம், அதே பிரி வைச் சேர்ந்த சந்தைப் படுத் தும் முகாமையாளர் றேமன்ட் பெரேரா, காரட்ஸ் தகவல் முகாமை யாளர் செல்வி எஸ். வீரசிங்க.

## பட்ஜட் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் 1985ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம்பற்றி சபை உத்தி யோகத்தர்களின் கலந்துரை யாடல் இம்மாதம் 27ம் தேதி முற்பகல் குழுக்கூட்ட அறை யில் நடைபெறவிருக்கிறது. யாழ். மாநகரசபை ஆணையா ளர் திரு. சி. வி. கே சிவ ஞானம் தலைமையில் இக்கூட் டம் நடைபெறும். (க)

## யாருடையது?

நாச்சிமார் கோவிலடியில் மூக்குக்கண்ணாடி யொன்று, தொலைபேசி பரிசோதகர் திரு. எஸ். சிறிஹரனால் கண் டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' வில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. உரியவர் தகுந்த அத் தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

குருநகரிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில்வைத்து யாழ். மாவட்ட ஆசிரியர்களின் சம்ப ளப் பணம் வழங்கப்படுவதை இலங்கை ஆசிரியர் சங்க யாழ். வாவட்டக் கிளை வன்மையா கக் கண்டித்துள்ளது

இது சம்பந்தமாக மேற்படி இ ஆ. சங்க யாழ் கிளைத்தலை வர் திரு. மு. தியாகராசாவும், செயலாளர் திரு வே. சிவரா சாவும் யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரியைச் சந் தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்

ஆசிரியர்களுக்கான சம்பளப் பணம தனிப்பட்ட காசோலை மூலமாக வழங்கப்படலாமே ஒழிய, குருநகரில் வைத்து சம் பளம் வழங்குவது ஆசிரியர் களுக்கு பெரும் சிரமத்தைக் கொடுக்குமென்றும் அக்குழுவி னர் வலியுறுத்தியுள்ளனர். [மா]

## குருநகரில் வழங்கப்படும் [redacted]

# யாழ்மாவட்ட ஆசிரியர்க்கு இம்முறை பணமாகசம்பளம்!

(கல்வியங்காடு நிருபர் ஐ. சண்முகலிங்கம்)

யாழ்.மாவட்டப் பாடசாலை களின் ஆசிரியர்களது சம்பளம் இம்மாதம் குருநகரில்வைத்து பணமாக வழங்கப்படும்.

யாழ் மாவட்டப் பாடசாலை களின் சகல அதிபர்களுக்கும் அவ்வப்பாடசாலைகளின் ஆசிரி யர்களது சம்பளம் முன்போல் ஒரே காசோலையாக அனுப்பி வைக்கப்படும்.

அதிபர்கள் முன்பு காசோலை களை பணமாக மாற்றிய தத் தமது பகுதி வங்கிகளில் பணம் பெறுவதற்கானசான்றிதழைப் பெற்றுவந்துஅதற்குரிய பணத் தினை குருநகர் வங்கியில் பெற வேண்டும்,

பெற்ற சம்பளப் பணத் தினை குருநகர்வங்கியில்வைத்து தத்தம் பாடசாலைகளின் ஆசி ரியர்கள், பிற ஊழியர்களுக்கு வழங்கவேண்டும்.

இடநெருக்கடியினைத் தவிர்க் கும்முகமாக ஒவ்வோர் பாட சாலைகளும் சம்பளம் வழங்கும் திகதி .காசோலைகளுடனை அறிவுறுத்தலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

குருநகர் வங்கியில் சம்பளம் பெறாத ஆசிரியர்களது சம்ப ளப் பணம் உடனடியாக வங்கி யில் திருப்பி ஒப்படைக்க அதி பர்கள் வேண்டப்பட்டுள்ள னர்

இவ்வாரத்தின் சனி,ஞாயிறு கிழமைகளில் ஆசிரியர்கள் சம் பளம்பெற நடவடிக்கை எடுக் பட்டுள்ளதாக அறியப்படுகி றது

சம்பளத்தைப் பணமாக வழங்கும் இத்திட்டம்பற்றி யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை அவர் கள் சகல பாடசாலைகளது அதிபர்களுக்கும் அறிவிப்பு செய்துள்ளார்,

சென்ற மாதச் சம்பளப் பணத்தினை யாழ். மாவட்டத் தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் தனித்தனி காசோலையாகவே பெற்றனர். இதனால் பல சிர மங்கள் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## லயன்ஸ் கழகம் நன்கொடை: ஒரு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பு நிதிக்கு பத்து லட்சம் ரூபாவை இலங் கை லயன்ஸ் கழகம்வழங்கியது தொடர்பாக முன்னாள் உதவி மாவட்ட ஆளுநரும், தற் போதைய ஆளுநர் சபை அங் கத்தவருமான சட்டத்தரணி க. குணரத்தினம் நேற்று ''ஈழ நாடு' இதழுக்கு அளித்த விளக் கத்தில்; யாழ். லயன்ஸ் கழகம் 306-B என்றும், 306-A கழ கமே மேற்படி நன்கொடையை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்,

## சனசமூகநிலையம் தீக்கிரை

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் கேணியடி உதய சூரியன் சனசமூக நிலையம் தீக் கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற் பகல் ரோந்து சுற்றிச்சென்ற ஆயுதப்படையினரைக் கண்டு சனசமூகநிலையத்துக்குள் பத் திரிகை வாசித்துக்கொண்டி ருந்தவர்கள் பீதியடைந்து ஓடினராம்.

இதனைத்தொடர்ந்து சன சமூக நிலையத்துக்குள் புகுந்த வர்கள், அங்கிருந்த தளபா டங்கள், பத்திரிகைகள், இரு சைக்கிள்களைப்போட்டு நிலையத் துக்கு தீ வைத்ததாகத் தெரி விக்கப்படுகிறது.

ஏழாலைப் பகுதியில் உள்ள அச்சகம் ஒன்றினுள் புகுந்த ஆயுதப் படையினர் 'இயக்கங் கள் சம்பந்தமான பிரசுரங் கள்' அச்சிடப் படுகின்றதா? என்றுகேட்டு சோதனைநடத்தி னராம். அங்கு எதுவித பிர சுரங்களும் கண்டெடுக்கப்பட வில்லை. பின்னர், கட்டுவன் ஊடாக ஆயுதப்படையினர் பலாலி முகாம் சென்றனர். [மா]

## அகதிகளுக்கு உடுபிடவைகள் சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

வவுனியா, மன்னார், முல் லைத்தீவு மாவட்டங்களில் அகதிகளாகியுள்ள தமிழ்மக் களுக்கென கொக்குவில் பகுதி யில் உடுபிடவைகள் சேகரிக் கப்பட்டு வருகின்றன.

இச்சேகரிப்பு நேற்று கொக்குவில் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கொக்கு வில் பிரஜைகள்குழு கேட் டுக் கொண்டதன் பேரிலேயே இப்பணி இடம் பெறுகின் றது. நேற்றையதினம் பெரு மளவில் உடுபிடவைகள் சேக ரிக்கப்பட்டன. மேலும் சில தினங்களுக்கு இச்சேகரிப்பு இடம் பெறும் என்று கூறப் பட்டது. (கி)

### ஐ. ஜி. பி. வர்த்தமானியில் அறிவிப்பு

# தேடப்படும் 34 இளைஞர்!

[கொழும்பு]

பயங்கரவாத தடுப்புசட்டத் தின்கீழ் பின்வரும் 34 பேரும் தேடப்படுவோராக பொலிஸ் மா அதிபரினால் வர்த்தமானி யில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அநேகர் மட்டக் களப்பு சிறைஉடைப்பிலும், மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த துப்பாக்கிக் கொள்ளை யிலும் சம்பந்தப்பட்டவர் களெனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

1. நாராயண ஜெகநாதன் (ஜெகன்) 2. அப்துல்காதர் முகமட் தௌபீக் அல்லது ஜுலிக் 3. இராமலிங்கம் வாசுதேவன் 4. அஹமத் ஹீசைன் ஜுனைதீன் அல்லது யு கே. 5. கணபதிப்பிள்ளை கந்தசாமி 6. நடேசலிங்கம் ராகவன் 7. மாசிலாமணி 8. சித்திரவேலு அசோகன் 9. ஐயாத்துரை விஹயகராஜ் அல்லது விநாதி 10. யோகன் கண்ணமுத்து 11. யோகன் 12. சுரேஷ் 13. வெற்றிவேலு 14. குணபாலன் அல்லது அருள் 15. காந்தன் 16 பால சிங்கம் உமாபதி 17 வணசிங் கம் 18. முதலி 19 அரசரத்தி னம் 20. ஞானப்பிரகாசம் 21. தயாபரன் 22. கணபதிப்பிள்ளை சித்தானந்தன் 23. அந்தோ னிப்பிள்ளை ஜெஸ்லி அல்லது வெஸ்லி 24. நோபர்ட் 25. மோகன் 26. பஞ்சாதரன் 27. சபாரத்தினம் 28. சுதா. 29. மோகன் 30. வெற்றிவேல் மாமாங்கம் 31. எஸ். கருணா கரன் 32. பெரும்பன் அல் லது ரவி 33 வைரமுத்து உமா காந்தன் 34 கண பதிப்பிள்ளை காளிதாஸ்

## உறவினர்கள் அடக்கம்செய்தனர்

(கல்வியங்காடு)

இருபாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது மரணமான தேவராசா ஜோன் சன் (3 வயது), இராசையா குணம் (28 வயது) ஆகியோ ரின் சடலங்கள் உறவினர்க ளால் அடக்கம்செய்யப்பட் டன

மற்றும் 60 வயது நிரம்பிய வல்லி சின்னத்தம்பி என்பவ ரின் சடலமும், இனம்தெரி யாத ஒருவரின் சடலமும் இச் செய்திஅச்சுக்குப்போகும்வரை யாழ். பெரியாஸ்பத்திரி சவச் சாலையில் இருப்பதாக தெரி விக்கப்பட்டது.

## 4 எதிர்க்கட்சித் தலைவர்கள் காவலில்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் ஜனநாய கத்தை மீட்பதற்காகப் போரா டும் நான்கு முக்கிய எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் நேற்று தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளனர். [சூ]

## அனுமதிப் பத்திரங்கள்

(கல்வியங்காடு)

கொழும்பில் நடைபெற விருக்கும் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற் றும் ஆசிரியர்கள் அனைவ யும் தங்கள் பகுதி உதவி அர சாங்க அதிபரினால் கையெ ழுத்திடப்பட்ட பத்திரங் களைப் பெற்றுக் கொண்டு வருமாறு பணிக்கப்பட்டுள்ள னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதிக்கு சிறில்மத்யூ கடிதம்

# "விளக்கம் கேட்காமலே விலக்கி விட்டார்கள்!"

[இ. கந்தசாமி]

"அமைச்சரவைக்கு விபரம் சமர்ப்பிக்கு முன்னரே ஜனாதிபதி பொதுமக்களுக்கு சர்வ கட்சி மாநாட்டு விபரங்களை வெளியிட்டுவிட்டார். அத்தோடு சர்வகட்சி மாநாட்டு யோசனைகளுக்கும் அரசுக்கும், ஐ.தே. கட்சிக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதனால் எனது கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவித்திருந்தேன். என்னை அழைத்து விளக்கம் கேட்காமலே, என்னை நீக்கிவிட்டீர்கள். என்னை அழைத்திருந்தால், இந்தவிளக்கங்களை அளித்திருப்பேன்."

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு பதவி நீக்கம் செய்யப்பட்ட கைத்தொழில் அமைச்சர் திரு சிறில் மத்யூ எழுதியுள்ளகடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. டென்ஸில் பெர்ணண்டோவை அமைச்சராக நியமித்ததிலிருந்து தன்மீது தவறுள்ளதென்பதை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

ஸ்ரீதர் (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதே
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் மினி
10-15, 1-15
ரஜனிகாந்த்-ரேவதி
நடிக்கும்
மகேந்திரனின்
கை கொடுக்கும் கை

இன்று முதல்
ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
பாலைவனச்சோலை
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
சத்தியம்
(ஈஸ்மன் கலர்)

## கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கல்வி மாவட்ட ஜனத்தொகைக் கல்விக் கருத்தரங்கு 28, 29 ஆம் திகதிகளில் பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கினை கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தொடக்கி வைப்பார்.

## "சகல ஆலயங்களிலும் வழிபாடு நடத்துக"

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் வேண்டி இங்குள்ள சகல ஆலயங்களிலும் விசேஷ ஆராதனை செய்ய வேண்டுமென்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் இணுவில் இந்துமகாசபைச் செயலாளரும், சமாதானசபைத் தலைவரான திரு. சி. சண்முகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில்நடைபெற்ற விசேஷ ஆராதனைகளுக்குப் பின்னர் திரு. கே. எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சண்முகலிங்கம் பேசுகையில் மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்திருந்தார்.

"தமிழ் இனம் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் செய்வதறியாது திகைக்கின்றது. இந்நிலையில் இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை', என்று அவர் சொன்னார். [மா]

வின்ஸர் (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்(

## ஊர்செழிக்க உழைத்தவர்



குடத்தனை வாழ் அன்பு நெஞ்சங்களிலும் பருத்தித்துறை வடமராட்சி மக்களின் அன்பு நெஞ்சங்களிலும் அமரர் சிவராசாவின் நாமம் ஒலித்துக் கொன்றே இருக்கின்றது. காரணம் அவர் அப் பகுதி மக்களுக்கு ஆற்றிய அரும் பெரும் சேவைதான்.

பிற்போக்காகக் கிடந்த குடத்தனையை முன்னேற்றிய பெருமை அமரருக்கே உரியது. அவர் தம் இளம்பிரயாம் தொட்டே சமூக சேவையில் ஈடுபட்டு விசேட சேவை உத்தியோகத்தராகப் பணி புரியும் வாய்புக்கிடைத்ததும் பொதுச் சேவையைத் திறம்படச் செய்தார். சவுக்குப் தோப்பு வளர்ப்பு, கூட்டுறவுச் சங்கக்கடை, நெசவுசாலை, வாசிகசாலை, சிறுவர் பள்ளிக்கூடம் இத்தனையும் அமரர் செய்த பணிகளில் சிலவாகும் மணல்தறையிலே களிமண்ணைப் பரவி விவசாயத்தை ஊக்குவித்த பெருமையையும். குடத்தனை மக்களை விவசாயத்தில் ஈடுபடச்செய்ததும், கரையோரப் பகுதி மக்களுக்கு நவீன சாதனங்களைப் பெற்றுக் கொடுத்ததும், அன்னாரின் சாதனைகளில் அடங்கும். அரசாங்க அதிகாரிகளாலும் சக ஊழியர்களாலும் அவரது அந்தியேட்டித் தினத்தன்று சவுக்கம் தோப்பிற்கு சிவராசா சவுக்கம் தோப்பெனப் பெயர் சூட்டியதும் அந்தியேட்டிக்கு முன்னே பொது மக்களும் பிறவூர் அபிமானிகளும் குடத்தனைக்கு "சிவராசபுரம்" என்று நாமம் சூட்டியதும் அமரர் செய்த தொண்டுகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

வ. தங்கராசா
(கோண்டாவில்)

Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

✶ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
✶ T. V. மேசை,
★ தண்ணீர்த் தாங்கி,
★ WASH BASIN,
★ TEAPOYS, ★ CENTRE TABLE,
★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

TRADE CENTRE,
ஹோம் பினன்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## இப்படியும் நடக்கிறது

சென்னை, புதுடில்லி, பிலிப்பைன்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா, மாஸ்கோ ... ...

என்ன புரிய வில்லையா?

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது மேற்கண்ட இடங்கள் தான் ஒலிக்கின்றன!

என்ன ... ... இன்னுமா புரிய வில்லை?

யாழ்ப்பாண மக்கள் இப்பொழுதெல்லாம் விரும்பிக் கேட்பது மேற்படி ஒலிபரப்பு நிலையச் செய்திகளைத் தான். இலங்கை வானொலி தனது செல்வாக்கை இங்கு துப்புரவாக இழந்து விட்டது!

கரன்ட் ஜோக்:

ஒருவர்: என்ன ... காலையில் எழுந்ததும் இலங்கை வானொலிச் செய்தி கேட்கத் துடிக்கிறீர்கள் ...

மற்றவர்; இரண்டு காரணமடா. ஒன்று; இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சியைத் தேடிப் பிடிக்க' 'மரதன்' ஓட வேண்டும். அடுத்த காரணம்; ஊரடங்கு உண்டா இல்லையா? எத்தனை மணிக்கு என்பதை அறிய வேண்டும்.

— ஊடுருவி

## பண்பாளர் சண்முகம்

காவல்துறையின் பொலிஸ் பகுதியில் உயர் அதிகாரியாக இருந்து தனது நிர்வாகத் திறமையாலும் கண்ணியத்தாலும் பொதுமக்களாலும் அரசினராலும் நன்கு மதிக்கப் பட்டவர் திரு. மு. சண்முகம் என்றால் இது புனைந்துரையாகாது.

1962ல் பட்டதாரியான திரு. சண்முகம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக நியமனம் பெற்று 1975ல் குற்றப்புலனாய்வுத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றபின்னர் சண்டிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவிஉயர்வு பெற்று அரிய சேவையாற்றித் தன் திறமையையும் ஆளுமையையும் நன்கு வெளிப்படுத்தினார்.

தனது தொழிலில் சிறப்புடன் விளங்கியமை போன்றே திரு. சண்முகம் தன் தாய் தந்தையர் மீதும் தான் பிறந்தபொன்னாலைக் கிராமத்தின் மீதும் பெருமதிப்புடையவராய் இருந்தார் தனது தந்தையாரான பொலிஸ் அதிபர் முருகேசு உயிருடன் இருந்தபோது அவரது மனம் மகிழச்செய்தது மட்டுமன்றி அவர் மறைந்த பின்னர் வருடந்தோறும் அவர் தினத்தைச் சிரத்தையுடன் நினைவு கூர்ந்தமையை நேரில் கண்டவர் இவரின் பெற்றோர் பக்தியை மெச்சிப் பாராட்டினர் பொன்னாலை அறிவு வளர்ச்சிக்கழகம் சிறுவர்களிடையே நடத்திய போட்டிகளுக்கு ஊக்கமளித்து உதவியமை இவரது கிராம அபிமானத்துக்கு நல்ல எடுத்துக் காட்டாகும்

இவர் பொன்னாலை வரதராஜப்பெருமாள் மீதும் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

பலவகையான சிறப்புக்களுடன் விளங்கிய சண்முகம் மிக இளம் வயதில் இவ்வுலகில் இருந்து மறைந்தது நம் சமூகத்திற்கும் அவரது குடும்பத்திற்கும் பேரிழப்பு என்றே சொல்லவேண்டும்.

— அருளாளன்

## விலை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

அரிசி ஒரு கிலோ 10 ரூபாவாக அதிகரித்துள்ளது

மரக்கறிகள் ஒரு கிலோ 15 ரூபாவுக்குமேல் அதிகரித்துள்ளது.

## ஓய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் தபால் நிலையத்தில் நாளை மறுதினம் 28ந்திகதி வெள்ளிக்கிழமையன்றே ஓய்வூதியம் வழங்கப்படும்.

27ந் திகதி இங்கு ஓய்வூதியம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது தவறுகுமென்றும் 28ந்திகதி காலையே ஓய்வூதியம் வழங்கப்படுமென்றும் கொக்குவில் தபாலதிபர் தெரிவித்துள்ளார். (கி)

UNIQUE COMMUNICATION SERVICE
யுனிக்
கொமுயுனிக்கேசன்
சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28'18 - 1-1 மகாதமா காந்தி றேட்.
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி: - 22726 547884, 548626, 549065, 549066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

''பெற்றெடுக்கின்றபோது
பெருந்துயர் அன்னை கொள்வாள்
பெற்ற பின் மகனைப் பார்த்துப்
'பிறந்தனன் மனிதன்' என்பாள்
குற்றமில் மகிழ்ச்சி உங்கள்
கூடவே பிறந்ததாகும்
பற்றியே அதை எடுக்கப்
பாரினில் யாருமில்லை!''

— இயேசு காவியம்

# நமதுநோக்கு

## பாசாங்கு (சம்)?

அணுக்குண்டின் அபாரமான அழிவுச் சக்தியே மூன்ருவது உலக யுத்தத்தைத் தடுத்து வருகிற தென்பதில் உண்மையில்லாமல் இல்லை.

இது எதனை விளக்குகின்றது? வாழத் தெரியாவிட்டால் சாவதே ஒரு வழி என்பது தெட்டத் தெளிவானதும் அமைதியை நாடுவது தவிர்க்க முடியாததாகின்றது.

சர்வகட்சி மாநாட்டை நாம் என்றுமே கேலி செய்ததில்லை. எந்த விரக்தி நிலையிலும் ஒரு ஒளி தோன்றலாம் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம்.

மலையைக் கல்லி எலியைப் பெற்றெடுத்தது போல உருவான அதன் முடிவுகளைத் தமிழர் கூட்டணி மட்டுமல்ல சிங்கள மக்கள் சார்பில் பௌத்த சங்கங்களும், முன்னுள் பிரதமர் சிறிமாவோ, சிரேட்ட அமைச்சர் சிறில் மத்தியூ போன்ருேர் நிராகரிப்பது எவ்விதத்திலும் விசித்திரமல்ல.

அமைச்சர் மத்தியூ தம்முடைய தீவிரமான கொள்கையை என்றுமே திடடவட்டமாகக் கூறிவந்தவர். ஆனுல் சமாதான முடிவுக்கு அவசியமான மிதவாதம் அவர் அறியாத பண்டமாகையால், நிலைமையை மோசப்படுத்தி வந்தவர்களில் அவர் பெரும்பங்கு கொண்டவர் தாமதித்து அவர் வெளியேற்றப்பட்டதால் அதிகபலன் உண்டோ என்பது ஐயம்.

என்ருலும், ஜனுதிபதி ஜெயவர்த்தன பெருங்கொடியில் விட்டுப் பிடிப்பதில் நம்பிக்கை கொண்டவர்; இக்கொள்கை அவருடைய ஆதரவாளர்கள் பற்றியது. ஆட்சிக்கெதிராக வாதாடுபவர்களை ஈன இரக்கமின்றி ஒடுக்கிவிடுவதில் நம்பிக்கை கொண்டவர்.

இவ்விருதலைப்பட்ட கொள்கைதான் இன்று இந்த இக்கட்டான நிலையை உண்டாக்கிவிட்டதோ என நினைக்கவேண்டியிருக்கிறது.

முன்னைநாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த கண்டனம் தமிழ் மக்களை ஏமாற்றமாட்டாது; தமிழர்களின் குறைகள் மிகச்சிலவே என்ற கொள்கையைக் கொண்ட முன்னுள் பிரதமர் ஜனுதிபதி ஜெயவர்த்தனவின் முயற்சி ஒரு பாசாங்கென்பதை ஏற்றுக்கொள்ள நாம் விரும்பினுலும் அவ்வாறு நினைப்பது அதர்மம்.

''நாடு ஒரு பெருங்காடாகின்றது'' மகாநாட்டின் முடிவுகளை ஏற்காவிடில், ஒரு காட்டு ராஜாவாக தலைமைத்துவம் பூண்பதை தாம் விரும்பவில்லையென்று உருவகப்படுத்திநிலைமையை விளக்கியிருக்கிருர் ஜனுதிபதி.

நாடு ஒருகொடிய காடாய் விட்டதென்கின்ருேம் நாம் சிங்கமாயின் புலி, சருகுபுலி, பூனை, எலிபோன்ற மிருகங்கள் ஒன்றுகூடி வாழ்வதென்ருல் அவற்றை அடக்கிஆள பாசாங்குபோதாது; பாசாங்குசம் போன்ற பெரும் ஆயுதங்கள் தேவைப்படும்.

பயங்கரவாதத்தை ஒழித்த பின்னரே தமிழர் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்ற குரல் ஒலிக்கின்றது; போரிலும் சமாதானத்திலும் ஒரே நேரத்தில் வெற்றி பெறலாமென்கிருர் பந்தோபஸ்து அமைச்சர். எவரும் இதில் ஏமாறுவதில்லை.

'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது' என்ற பழமொழியை பந்தோபஸ்து அமைச்சர் அறிந்திருக்கவேண்டும்

நாம் பயங்கரவாதத்தை என்றுமே ஆதரித்ததில்லை. கடந்த காலத்தில் அப்பாவி மக்கள் எவராயிருந்தாலும் எந்தப்பகுதியினரும் இம்சைக்குள்ளாவதை நாம் கண்டித்துவந்திருக்கிருேம்.

அண்மையில் இரு பொலிஸ் அதிகாரிகள் கடத்தப்பட்டதும், அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி வந்த விண்ணப்பங்களை நாம் அனுதாபத்துடன் அங்கீகரித்துப்பிரசுரித்தோம். அக்கோரிக்கை நிறைவேற வேண்டுமென்பதே எமது கருத்து.

ஆனுல் நாளுக்கு நாள் நிலைமை மோசமாவதை பொறுப்புடைய தலைவர்கள் உணரத்தயங்குவதேன்?

ஜனுதிபதி குறிப்பிட்ட காட்டை நாம் காண்கின்ருேம்; அங்கு அடர்ந்திருக்கும் மரங்களின் வேரை நாம் காண்பதில்லை. மரங்கள் வெட்டப்படுவதைக் கண்டு நாம்அஞ்சுகின்ருேம், அவற்றின் வேரே இவ்வித வளர்ச்சிக்குக்கால் என்பதைக் காண மறுக்கிருேம்

காட்டை அழிப்பது அபாயம்; இந்த அபாயச் செயலில் நாடு சிக்கிக்கொண்டிருக்கிறது இதற்கொருவழி காண, சிக்கலை எடுக்கவல்ல நியாயம்தெரிந்த இன்னெருவரை நாடுவது அகௌரவம் அல்ல; அவ்வித உதவியை அலட்சியம் செய்யாது, காலம் தாழ்த்தாது ஆயுதங்களைக் கைவிட்டு மீண்டும் சமாதான மேசையை நாடுவதே நாட்டுக்கும் நமக்கும் நல்லது.

### ஆசிரியர்..

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

**உடனடியாக பயிற்சி பத்திரம்**

ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றி சித்திபெறுபவர்களுக்கு 3 கிழமை ஆசிரியர்பயிற்சி பெறுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் உடனடியாகவே வழங்கப்பட கல்விச் சேவைக்கு ஏற்பாடுசெய்துள்ளது.

### வவனியாவில்

# அரிசிஆலை உரிமையாளர்கள் அச்சத்தில் வாழ்கின்றனர்

[வவனியா] வவனியா கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள செல்வசந்நிதி அரிசி ஆலை உரிமையாளர் மயில்வாகனம் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தின்பின் இங்குள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

வவனியா - மன்னுர் வீதியில் உள்ள மில் உரிமையாளர் ஒருவர் முன்பு ஒரு தடவை சுடப்பட்டுப் படுகாயமடைந்தது, இரண்டு அரிசி ஆலைகளில் பாரிய கொள்ளைகள் இடம் பெற்றது ஆகிய சம்பவங்களையடுத்து இப்பொழுது நிலைமை மோசமடைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஊரடங்குச் சட்ட நேரத்திலேயே குறித்த கொலை நடந்துள்ளது

பல மில் உரிமையாளர்கள் தமது ஸ்தாபனங்களை மூடிவிட்டுக் குடும்பங்களுடன் சொந்த ஊர்களுக்குத் திரும்பி விட்டார்கள்.

# ''பண்ணுகம் இளைஞர்களை விடுதலை செய்யவும்''

## கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''பண்ணுகம் கிராமத்தில் இம்மாதம் 12-ம் திகதியன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் இன்னும் ஒன்பது பேர் விடுதலை செய்யப்படாது இருக்கின்றனர். ஒன்றுமறியாத அப்பாவி இளைஞர்களான இவர்களைக் காலி பூஸா முகாமில் தடுத்து வைத்திருப்பதாக அறிகின்ருேம். இவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி இவர்கள் அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று எமது சங்கம் கேட்டுக்கொள்கின்றது.''

இவ்வாறு பண்ணுகம் கிராம அபிவிருத்திச் சங்கம் காலி பூஸா இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்ணுகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். பொன்னம்பலத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இம்மகஜரின் பிரதிகள் ஜனுதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ. பிரஜைகள் குழு ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

## சுழிபுரம் பிரஜைகள் குழு

(சுழிபுரம்)

சுழிபுரம் பிரஜைகள்குழு ஆரம்பக்கூட்டம் சுழிபுரம் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன் தலைவராக திரு வை. இராசசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் உபதலைவராக திரு வ. கிருஷ்ணசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இணைச் செயலாளராக திருவாளர்கள் சு. தவச்செல்வம், ப. சி செல்வநாயகமும், தனுதிகாரியாக திரு. எம். மகாலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பத்துப் பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சுழிபுரம் கிராம அபிவிருத்திச் சபை எல்லையைக் கொண்ட பகுதி உள்ளடங்கிய மக்கள் இதில் அடங்குவர்.

## கொள்ளைகளின்...

(1ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

''பருத்தித்துறை, சாவகச்சேரித் தொகுதிகளில் குடிநீர் விநியோக வேலைகளையே சமக்கோன் நிறுவனம் செய்துவருகின்றது, இத்திட்டம் பூர்த்தியானதும் பருத்தித்துறைப் பகுதியில் 40,000 மக்களும் சாவகச்சேரிப் பகுதியில் 40,000 மக்களும் பயன்பெறுவர் தற்போது 75 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன.

சமக்கோன் நிறுவனம் ஒரு தனியார் உள்ளூர் நிறுவனமாகும். இந்நிறுவனம் இக்குழாய் நீர்த்திட்ட வேலைகளைவிட வேறு தமிழ்ப்பகுதிகளில் அபிவிருத்தி, நிர்மாண ஒப்பந்த வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றது. எனினும் இதனை உணராது எமது பகுதி அபிவிருத்தியையே குன்றச்செய்யும் நோக்கமாக அடிக்கடி இந்நிறுவனத்தில் கொள்ளைகள் இடம்பெற்றுவருகின்றன.

இக்கொள்ளைகள் காரணமாக நிறுவனம் மூடப்படவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது நீர்விநியோகத்திட்ட வேலைகளும் இடைநடுவில் நின்றுவிடும், இததொழில் வாய்ப்பை நம்பிவாழும் எமது குடும்பங்கள் நிர்க்கதியான நிலையை அடையவுள்ளன. ஆதலால் கொள்ளையடிக்கப்பட்ட எமதுநிறுவனப்பொருட்களையும், உபகரணங்களையும் இவற்றை அபகரித்தவர்கள் மனிதாபிமானத்துடன் திரும்ப ஒப்படைக்குமாறு பகிரங்கமாகக்கேட்டுக் கொள்ளுகின்றேம்.

## இந்தியக் கப்பல் தாக்கப்பட்டது

(புதுடில்லி)

இந்தியாவின் எண்ணெய்க் கப்பல் ஒன்று வளைகுடாவில் வைத்து போர்விமானம் ஒன்றினுல் தாக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து நாற்பதாயிரம் தொன் எடையுள்ள இந்தக் கப்பலின் தளமேடுசேதமடைந்துள்ளதாகவும் சிப்பந்தி ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட இந்தக் கப்பலை மீட்க பஹ்றெய்னிலிருந்து இழுவைப்படகுகள் அனுப்பப்பட்டுள்ளன.

வளைகுடாவில் இதே பகுதியில் தான் முன்னர் பல கப்பல்களை ஈரானிய போர் விமானங்கள் தாக்கியுள்ளன.

## இந்திய...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த 117 தொகுதிகளிலும் 9 கோடி 70 லட்சம் மக்கள் நாளை வாக்களிக்கிருர்கள். பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அட்டல் பிஹாரி வாஜ்பாய், காங்கிரஸ் எஸ் தலைவர் சரத் பாவார், உள்துறை அமைச்சர் நரசிம்மராவ், எரிசக்தி அமைச்சர் சிவசங்கர், அமைச்சர் சந்சாத்தே, முன்னுள் அமைச்சர்கள் சரண்சிங் பிரமானந்தரெட்டி, முன்னுள் முதலமைச்சர்கள் சென்னு ரெட்டி. அந்துலே, அந்சையா ஆகியோரது தொகுதிகளும் இதில் அடங்குகின்றன.

மனிப்பூர் மாநிலம், யூனியன் பிரதேசமான கோவா டயூ' டமன் ஆகியவற்றில் நாளை சட்டசபைத் தேர்தல்களும் நடைபெறுகின்றன.

(சூ)

## டாக்டர்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

குருநாகலைக்கும் மாத்தளைக்கும் இடையில் வைத்து இந்த டாக்டரும், மனைவியும் கும்பல் ஒன்றினுல் தாக்கப்பட்டார்களாம். வான் ஒன்றில் பிரயாணம் செய்கையில் இவ்வாறு இவர்கள் மரணமாகியுள்ளனர்.


## மரணஅறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

இவர் திரு. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஐயாத்துரை, பொன்னம்பலம், மகள் பார்வதிப்பிள்ளையின் அன்புத் தாயாரும், பொன்னம்மா, மருதைனுர் அவர்களின் அன்பு மாமியாரும் ஆவர். இவரது ஈமக்கிரிகைகள் பாலியாறு மயானத்தில் புதன்கிழமை 26-12-1984 பிற்பகல் ஐந்து மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சி. மருதைனுர் மருமகன், 584, விஞயகபுரம், துணுக்காய்.

1096

## மரண அறிவித்தல்

### திரு ஆறுமுகம் சண்முகம்

ஆவரங்காலைச் சேர்ந்தவரும் மாங்குளம் பொலிஸ் சார்ஜண்டுமான ஆறுமுகம் சண்முகம் காலமானுர். அன்னுர் ஆறுமுகம் ஆசைப்பிள்ளைதம்பதிகளின் அருமை மகனும் பத்தமேனி சிவானந்தவல்லியின் அன்புக்கணவரும தவகுமார், தியாகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவபாதம், சர்வானந்தம், புனிதவதி, பூமணி தியாகராசா ஆகியோரின் சகோதரரும், உமாபதிசிவம், மார்க்கண்டேயவாசர் ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் 26-12-84 இன்று புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு பத்தமேனி அச்சுவேலியில் நடைபெறும். உற்ருர், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1095


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org